1980 ஜூலை 8] [திரு. இரா. கருப்பையா]

நடமாடுவதைத் தடை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படுமா? அதோடு லாரி விபத்திலே மரணம் அடையக்கூடியவர் களுக்கு நஷ்டஈடு அளிக்கக் கூடிய முறையிலே லாரிகளின் உரிமை யாளர்கள் மூலம் Hazardous insurance என்கின்ற திட்டத்தின் அடிப்படையிலே இன்ஷூர் செய்து அதன் மூலமாக நஷ்ட ஈட்டுத் தொகையைப் இறந்தவர்களின் குடும்பத்தினர் பெறு வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரி ஓட்டத்தை சீர்படுத்துவது பற்றி முன்பே தமிழக அரசு பல திட்டங்களையும், பல்வேறு முயற்சிகளையும் செய்திருக்கிறது. நடுவில் சில காலத்தில் நள்ளிரவு 12 மணி முதல் விடியற்காலை 4 மணி வரையில் லாரிகள் ஓடக்கூடாது என்று தடுத்து நிறுத்தப்பட்டு நிறைவேற்றப் பெற்றன. ஆனால் அதிலேயும் சில சங்கடங்கள் இருக்கின்றன. சென்னையிலிருந்து தூத்துக்குடிக்கோ, திருநெல்வேலிக்கோ அவசரமாகப் போக வேண்டிய லாரிகள் இரவில் போக்குவரத்து அதிகமில்லாத நேரங்களில் விரைவாகப் போவதற்கு வழி இருக் கிறது. ஆனால் சில சமயங்களில் அதிலும் ஆபத்து இருப்பதாக தெரிகிறது. ஆகவே அது ஓட்டுநர்களின் தன்மையைப் பொருத்தது. சில நேரங்களில் அவர்களாகவே 12 மணி முதல் 4 மணி வரையில் நிறுத்திவிட்டு ஓய்வு எடுத்துக் கொண்டு செல்லலாம். நிதானமாகச் செல்பவர்களும் உண்டு, எச்சரிக்கை யாகச் செல்பவர்களும் உண்டு. அதையெல்லாம் ஓட்டுநர்க ளாகவே கடைபிடிக்கவேண்டுமே தவிர, நள்ளிரவு 12 மணி முதல் விடியற்காலை 4 மணி வரை லாரிகள் ஓடக்கூடாது என்று தடை விதிப்பது சாத்தியமல்ல. லாரிகள் பகல் நேரங்களில் விரைவாகப் போனால், போக்குவரத்து அதிகமாக இருக்கும் நேரமாதலால், பல சங்கடங்கள் உண்டாகும். ஆகவே ஓட்டுநர்கள்தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அடுத்து, லாரிகள் போக்கு வரத்துக்கு எப்படி இன்ஷூரன்ஸ் விதிகள் இருக்கின்றன என்று இங்கே என்னிடம் புள்ளி விவரங்கள் இல்லை. ஆனால் பல் வேறு விதமான இன்ஷூரன்ஸ்கள் இருக்கின்றன. ஆனால் தற்போதுள்ள அனுபவங்களின் அடிப்படையில் ஏதாவது ஒரு வகையில் இன்ஷூரன்ஸ்கள் இல்லாமல் இருக்குமேயானால், அதை மாற்றுவதற்கான வழி வகைகள் செய்ய ஆராயப்படும்.

3. (ஆ) திருச்சி அரசு மருத்துவமனையில் செவிலியர் போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 54-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைக்

குறித்து, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, திருவாளர்கள் பொ. விஜயராகவன், அன்பில் தர்மலிங்கம், வெ. அரங்கராசன், டி. ஆர். இராசாராம் நாயுடு, ஆர். உமாநாத், இரா. தாமரைக்கனி, பி. முசிறிப் புத்தன் ஆகியோர் கொண்டு வருகிறார்கள். திரு. பொ. விஜய ராகவன் . . . .

திரு. பொ விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருச்சி அரசு மருத்துவ மனையில் செவிலியர் நடத்தி வரும் வேலை நிறுத்தப் போராட்டம் குறித்த"

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை எண். 600, சுகாதாரம் மற்றும் குடும்பநலம், நாள் 2—4—1979 வெளியிடப்பட்ட பின்னர், அதை செயல்படுத்துவதில் மருந்தாளுநர்களிடையும், செவிலியர்களிடையும் கருத்து வேறுபாடு மிகுதியாக ஏற்பட்டது. இந்த ஆணையை தொடர்ந்து வெளியிடப்பட்ட குறிப்பாணைகளால் நிலைமை சீர்கேடு அடைந்தது. இவைகளால் சில பணிகளை மருத்துவமனைகளில் செய்ய செவிலியர்கள் மறுத்தனர். பொதுமக்கள் இதனால் பெருத்த இடையூறு அடைந்தனர். செவிலியர்களும், மருந்தாளுநர்களும், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இப்பிரச்சனை குறித்து கலந்து பேசி முடிவெடுக்க 7—7—80 அன்று கூட்டப்பட்ட கூட்டத்தில் மருந்தாளுநர் மற்றும் செவிலியர் சங்கப் பிரதிநிதிகள், மருத்துவக் கல்வி இயக்குநர், மருத்துவ பணி மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநர் ஆகியோர் கலந்து கொண்டனர். அனைத்து தரப்பினரது கருத்துக்களும் தெரிவிக்கப்பட்ட பின்னர், சுமுகமான முறையில் கீழ்க்கண்ட முடிவுகள் ஒருமனதாக எடுக்கப்பட்டது.

(1) எந்தெந்த மருத்துவ மனைகளில் மருந்து கோரிக்கை பட்டியல் தினமும் தயாரிக்கப்படுகின்றதோ, அங்கெல்லாம் அதே முறையைப் பின்பற்ற வேண்டும்.

(2) எந்தெந்த மருத்துவ மனைகளில் தேவை குறிப்புகள் தயாரிக்கும் முறை வார அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றதோ அங்கெல்லாம் இனி மூன்று நாளுக்கு ஒரு முறை தயாரிக்க வேண்டும்.

1980 ஜூலை 8] [டாக்டர் எச். வி. ஹண்டே]

(3) திருச்சிராப்பள்ளி தலைமை மருத்துவ மனையில், மருந்துகள் நாளுக்கு ஒரு முறை (Daily) பெறும் திட்டத்தை பின்பற்ற வேண்டும்.

(4) இத்திட்டங்களினால் மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் வேலை பளு அதிகரிக்குமாகையால் அரசு தொழுநோய் கட்டுப்பாடு பிரிவுகளில் மிகுதியாக உள்ள மருந்தாளுநர்கள் தலைமை மருத்துவ மனைகளுக்கு மாற்றப்படுவார்கள்.

இந்த முடிவுகளை உடனடியாக நிறைவேற்ற மருத்துவப் பணி மற்றும் குடும்ப நலத்துறை இயக்குனர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். கருத்து வேறுபாடுகளை தவிர்த்து எந்தவித தகராறுகளுக்கும் இடமில்லாமல் இனி பணிபுரிவ தாக இருதரப்பினரும் உறுதி அளித்துள்ளனர். நிலைமைகளை உணர்ந்து அரசுடன் ஒத்துழைத்தற்கு செவிலியர் மற்றும் மருந்தாளுநர் சங்கங்களுக்கு நன்றியினைதெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செவிலியர்களுக்கும், மருந்தாளுநர் களிடையேயும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இந்தப் போராட்டம் ஏற்பட்டதாக இந்த அறிக்கையில் கூறப் பட்டிருக்கிறது. அதைத் தீர்ப்பதற்காக 7—7—1980 அன்று பேச்சு வார்த்தைகள் நடைபெற்று ஒருசில முடிவுகள் எடுக்கப் பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதிலே ''இத் திட்டங்களினால் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் வேலைப் பளு அதிகரிக்குமாகையால் அரசு தொழுநோய் கட்டுப் பாடு பிரிவுகளில் மிகுதியாக உள்ள மருந்தாளுநர்களை தலைமை மருத்துவ மனைகளுக்கு மாற்றப்படுவார்கள்'' என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. அப்படியென்றால் தொழு நோய் கட்டுப்பாடு பிரிவுகளில் மிகுதியாக உள்ள மருந்தாளுநர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள். அவர்களை இந்த அரசாங்கம் எக்ஸஸாக இருக்கக்கூடிய பணியாளர்களாக வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்? அப்படி எவ்வளவு பேர்கள் இருக்கி றார்கள்? எவ்வளவு பேர்கள் இந்தப் பணிக்காக தலைமை மருத்துவ மனைக்கு அனுப்பப்படுவார்கள் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழு நோய் கட்டுப்பாடு பிரிவு அலுவலர்கள் அதாவது மருந்தாளுநர்கள், நம்முடைய கணக்கின் படிசராசரியாக இரண்டு பேர்கள்தான் இருக்கிறார்கள். அங்கே வேலை இல்லாமல் இல்லை. அவர்களுக்கு அங்கே வேலை இருக்கிறது. ஆனால் இந்த டிஸ்டிரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியிலே வேலைப் பளு ஜாஸ்தியாக இருக்கிற காரணத் தினால் அவர்களை அங்கேயிருந்து தலைமை மருத்துவ மனைக்கு கொண்டு வருவதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று அறிந்துதான் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

[1980 ஜூலை 8

* திரு அன்பில் தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, திருச்சியில் நடைபெற்று வந்த செவிலியர் போராட்டம் காரணமாக அங்கே வேலைகள் தடைப்படுத்தப்பட்டது என்பது மட்டுமல்ல, அண்மையில் 4 ஆம் தேதி திண்டுக்கல்லிலிருந்து வந்த ஒரு லாரி ஒரு மரத்தில் மோதியது, 51 பேர்கள் அதில் வந்ததில், அந்த இடத்திலேயே மூன்று பேர்கள் இறந்துவிட்டார்கள். மருத்துவ மனைக்குச் சென்று அங்கே ஆறு பேர்கள் இறந்திருக்கிறார்கள். இன்னும் மூன்று நான்கு பேர்களின் உயிர் ஊசலாடிக்கொண்டு இருக்கிறது. நேற்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் நான் தெரிவித்தபோது அதுகுறித்து சமரசம் செய்து வைக்க முயற்சி எடுத்து, சமரசம் செய்து வைத்து இங்கே அறிக்கையும் வைத்திருக்கிறார்கள். நான் குறிப்பிட விரும்புவது, குறித்த காலத்தில் இது செய்யப்பட்டிருந்தால் அவர்களது உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும் என்பது என் கருத்து. ஆனால் விதி என்று பலர் வேதாந்தம் சொல்லலாம். தக்க நேரத்தில் அது செய்யப்பட்டிருந்தால் அவர்கள் காப்பாற்றப்பட்டிருப்பார்கள். ஆகவே இனிமேலாவது உடனடியாக அப்படிப்பட்ட போராட்டங்கள் நடைபெறுகிறபோது நடவடிக்கைகள் எடுத்து தீர்த்து வைக்க வேண்டும் என்பதை எனது வேண்டுகோளாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, வேண்டுகோள் என்ற வகையில் அதை முடிப்பதற்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில குற்றச்சாட்டுகளை சுமத்தியிருப்பதால் அதைப் பயன்படுத்தி அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு இடமில்லை என்பதைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

நேற்றைய தினம் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னைச் சந்தித்த நேரத்தில் சொன்னார்கள். இறந்துபோனதற்குக் காரணம், அங்கே செவிலியர்கள் உடனடியாக உதவி செய்யவோ அல்லது கவனிக்கவோ இல்லை என்பதால் அல்ல. சிகிச்சை கொடுக்கப்பட்டது. இரண்டு நாட்களுக்கு முன்பாக உடனடியாக அங்குள்ள டி. எம். ஓ. வுடன் தொலைபேசி மூலம் நான் தொடர்பு கொண்டு, எல்லாவிதமான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. பெரிய விவசாயிகள் சங்கத்தில் சேர்ந்தவர்கள் உடனடியாக கவனிக்க வேண்டும் என்று டி. எம். ஓ. வுடன் தொலை பேசி மூலம் தொடர்பு கொண்டு எல்லா வகையான வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, கவனமின்மை காரணமாக நமக்கு இழப்பு ஏற்படவில்லை, என்பதை முதலில்

தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொரு குற்றச்சாட்டையும் சுமத்தியிருக்கிறார்கள். உடனடியாகத் தீர்த்து வைத்திருக்க வேண்டாமா என்று கேட்டார்கள். உடனடியாகக் கவனிப்ப தற்காக பல்வேறு கட்டங்களில் நான் பொறுப்பேற்றுக் கொண்ட உடன் அத்துறைச் செயலாளர் அவர்களிடம் சொல்லி இரண்டு பேர்களையும் கூப்பிட்டு பேச ஏற்பாடு செய்தேன். சுமுகமான நிலை ஏற்படவில்லை. நேற்று உறுப்பினர் அவர்கள் என்னைப் பார்த்த நேரத்தில் கூடச் சொன்னேன் ஏற்கெனவே நீங்கள் சொல்வதற்கு முன்பாகவே நான் இந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருகிறேன். 11–30 மணிக்கு பார்க்க இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் உடனடியாக எல்லாவகையான ஏற்பாடுகளும் செய்து கொண்டிருக்கிறோம். சுமுகமான வகையில் இந்த சச்சரவு தீருவதற்காக எல்லா வகையான நடவடிக்கைகளும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். என்பதைத் திட்டவட்டமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன்.

திரு வெ. அரங்கராசன் : தலைவர் அவர்களே, இந்த ஒப்பந் தத்தின்படி திருச்சி தலைமை மருத்துவ மனையில் மட்டும் தினசரி மருந்துகள் பெறும் திட்டத்தையும், மற்ற மாவட்ட மருத்துவ மனைகளில் மூன்று தினங்களுக்கு ஒரு முறை என்றும் திட்டம் தீட்டி இருக்கிறார்கள். அவ்விதத்தில் தான் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. எனவே மற்ற மருத்துவ மனைகளிலும் அதாவது மற்ற மாவட்ட மருத்துவ மனைகளிலும் மூன்று நாட் கள் என்பதற்குப் பதிலாக மருந்துகள் நாளுக்கு ஒரு முறை பெறும் திட்டத்தை அமுல்படுத்த ஏதாவது திட்டமிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தினசரி அந்த மருத்துவ மனைகளை வாங்குவதற்காக திட்டம் தீட்டுவது நன்றாகத்தான் இருக்கும். ஆனால் பார்மசிஸ்ட்டுகளின் பற்றாக் குறை காரணமாக இதை உடனடியாக நாம் அமுல் படுத்த முடியவில்லை. ஆகவே எங்கெங்கே மிகவும் அவசரமாகக் கவனம் செலுத்த வேண்டுமோ எங்கெங்கே ஸீரியஸ் பிராப்ளம்ஸ் இருக் கிறதோ அந்த இடத்தில் குறிப்பாக திருச்சியில் உள்ள தலைமை மருத்துவமனை போன்ற மருத்துவமனைகளில் 'டெய்லி இன் டென்ட்' போட ஏற்பாடு செய்திருக்கிறோம். மற்ற மருத்துவ மனைகளில் வாரத்திற்கு ஒரு முறை என்றிருந்ததை மூன்று நாட் களுக்கு ஒரு முறை என்று மாற்றி யிருக்கிறோம். இரண்டுசாராரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். தினசரி என்றால் பார்மசிஸ்ட் பற்றாக்குறை இருக்கிறது. அந்த பற்றாக்குறையைச் சரிக்கட்டி னால் அந்தத் திட்டத்தைப் பற்றியும் விவாதித்துக் கொண்டிருக் கிறோம். அதற்குரிய ஏற்பாட்டை நிதி நிலை சரியாக வரும்

போது செய்ய முடிந்தால், பார்மசிஸ்ட்டுகளின் எண்ணிக்கையை உயர்த்தி ஏராளமான பார்மசிஸ்டுகள் வரக்கூடிய வாய்ப்பு ஏற்படுமானால் நிச்சயமாக டெய்லி இன்டென்ட் போட்டு மருந்துகள் கொடுக்க சௌகரியமாக இருக்கும் அந்த வகையில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 9–40)

திரு ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, நேற்று நீண்ட நேரம் சம்பந்தப்பட்ட எல்லோருடனும் பேசி, இந்தப் பிரச்சினையை வெற்றிகரமாக தீர்த்து வைத்தமைக்கு அமைச்சர் அவர்ளுக்கு உங்கள் மூலமாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்- பாராட்டுகிறேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரைக்கும் இந்த அண்ணா தி. மு. க. ஆட்சி அமைவதற்கு முன்னே, ஆளுநர் அவர்கள் ஆட்சி இருந்த போது முரண்பட்ட உத்தரவுகள், இன்றைக்கு ஒன்று நாளைக்கு மற்றொன்று அதற்கு அடுத்தநாள் ஒன்றுமாக இப்படி முரண்பட்ட உத்தரவுகள் போட்டதால்தான்

It was the inefficiency of the Advisers regime that has led to all these inconveniences to all the patients inside the hospital. I am glad it has been solved now.

இதைத் தீர்த்து வைத்திருக்கிறீர்கள். என்னுடைய கேள்வி என்ன வென்றால் இந்த டிஸ்பியூட் திருச்சியிலே நடைபெற்ற போது அங்கே இருக்கின்ற டி. எம். ஓ. அங்கிருக்கக்கூடிய நர்சுகளிடத்திலே அக்கிரசிவ்வாக நடந்து கொண்டு பிராப்பராக ஹாண்டில் பண்ணவில்லை. என்ற இம்பிரஷன் வந்திருக்கிறது பலரை இம்மீடியட்டாக டிரான்ஸ்பர் பண்ணியதாகவும் எப்பெக்ட்டிவ் ஆக்ஷன் எடுத்திருப்பதாகவும் தெரிகிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இந்த டிஸ்பியூட் சம்பந்தமாக இந்த பீரியட்டில் எடுக்கப்பட்ட டிராஸ்பர் ஆர்டர்கள் அல்லது சார்ஜ் ஷட்டுகள், ஆக்ஷன்கள் பூராவையும் டிராப் செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? எடுத்திருந்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறை மிகமிக சுறுசுறுப்பாகப் பணியாற்றிய தப் பாராட்டியதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். இந்த டிஸ்பியூட்டை பொறுத்தவரைக்கும் டி. எம். ஓ. கொஞ்சம் கடுமையாக இருந்திருக்கிறார். இது ஒவ்வொருவருடைய முறை. டிசிப்பிளினாக இருக்க வேண்டுமென்று சில அதிகாரிகள் இருப்பார்கள் சிலர் சூழ்நிலைக்கு ஏற்ப கொஞ்சம் விட்டுக் கொடுத்து பிராபர் முறையிலே செய்வார்கள். இதிலே இப்படி செய்ய வேண்டு மென்று சொல்வதற்கு கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். ஆனால் அவர் ஏற்கனவே போட்டிருந்த உத்தரவுகள் பூராவையும் , மாற்றங்கள் பூராவை

TRUTH ALONE TRIUMPHS

யும் சார்ஜ் ஷீட்டுகள் பூராவையும் மாற்றியிருக்கிறோம். அவை களையெல்லாம் வாபஸ் பெற்றால் தான் சுமூகமான சூழ்நிலை ஏற்படும். வாபஸ் பெறவேண்டுமென்று அதற்காக நாங்கள் ஆணையிட்டிருக்கிறோம்.

திரு இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலே நடைபெற்ற செவிலியர்கள் போராட்டம், தமிழ்நாடு எங்கும் பரவாத வகையில் திருச்சியோடு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கூப்பிட்டு, இப்படி நடவடிக்கை எடுத்தமைக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்காலிகமாக இல்லாமல், நிரந்தரமாக ஏற்படுத்தியதற்கு நன்றி. ஆனால், இந்தப் போராட்டம் நடக் கின்றபோது வெளியே ரவுடிகள் செவிலியர்களை கற்பழிக்கப் போவதாக மிரட்டியதாகத் தெரிகிறது. அப்பேர்ப்பட்டவர்கள் மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். அப்படி என்ன செய்தது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் போராட்டத்தைப் பொறுத்தவரைக்கும் நான் உண்மையாகவே சொல்கின்றேன். இது ஒரு துரதிருஷ்ட வசமான போராட்டம்தான். ஏனென்றால், செவிலியர்களை நாம்சகோதரிகள் போல் கவனிக்க வேண்டும். அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு, நேற்றையதினம் பேசுகின்ற நேரத் திலேகூட, பார்மசிஸ்டுகளைப் பார்த்து சொல்லியிருக்கிறேன். ஆகவேஇந்தப் பிரச்னையைப் பொறுத்தவரைக்கும் இதற்கு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டிருக்கின்றது. என்று நான் கருது கிறேன். செவிலியர்களுக்கு நல்ல வகையிலே பாதுகாப்பு கொடுக் கப்படும். என்ற உறுதியினை இந்த மன்றத்தின் மூலமாக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மீண்டும் பரவா மல் வழி செய்யப்பட்டிருக்கிறது. இதிலே உள்ள பெரிய பிரச்சினை என்னவென்றால், அவர்களுக்கு ஓர்க் லோட் அதிகம் ஏற்பட் டிருக்கிறது. இந்த இன் டேக்கைப் பற்றி ஆழமாக ஸ்டடி செய்து இந்தப் பிரச்சினையிலே கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. பார்மசிஸ்டுகளுக்கும் ஓர்க் லோட் அதிகமாகியிருக்கிறது. அவர்கள் எண்ணிக்கையையும் உயர்த்த வேண்டும். செவிலியர்களின் எண்ணிக்கையையும் உயர்த்த வேண்டும். அப்போதுதான் அவர் கள் சரியாக செயல் பட முடியும். அதற்காகத் தான் நான் நர்சிங் டியூட்டீஸ் என்று கணக்கு எழுதுவது போன்ற வற்றிற்கும் கொடுத்திருக்கிறோம். ஜாஸ்தியாக இவர்கள் எண்ணிக்கையை பெருக்க வேண்டுமென்றால், இவர்களின் இன்-டேக்கை எப்படி பெருக்குவது என்பதில் நிதி நிலைமையையும் ஆராய்ந்து , அதற் குரிய வகையிலே இவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு தீவிரமாக உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

திரு பி. முசிறிப்புத்தன் : பேரவைத் தலைவரவர்களே, நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த திருச்சி அரசு மருத்துவ மனையிலே செவிலியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தைக் குறித்து நேற்று பிற்பகலிலே அனைவரையும் அழைத்துப் பேசி ஒரு நல்ல முடிவு கொண்டு வந்திருக்கிறார்கள். அதுவே போதுமானது என்று கருதுகிறேன். ஆளுநர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டது போல், இதுபோன்ற பிரச்சினை களில் காலதாமதம் ஏற்படாமல், உடனுக்குடன் கவனிக்கப்பட்டது என்பது மட்டுமல்ல. பொதுவாகவே, மருத்துவ மனை களில் இதுபோன்ற வேலை நிறுத்தங்கள் நடப்பதற்கு அறிகுறி தென்படுவதற்கு முன்பாக, இவைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டு மென்று நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமைச் சகோதரர் தாமரைக்கனி அவர்கள் செவிலியர் களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டுமென்று சொன்னார்கள். நான் அச்சப்படுவதெல்லாம் மருந்தாளுநர்களும் செவிலியர்களும் நடத்துகின்ற வேலை நிறுத்தத்தில் வியாதியஸ்தர்களுக்கு பாது காப்புத் தர முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். பிரச்சினை தீர இந்த நல்ல முயற்சியை மேற்கொண்ட நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் இதே பொருள் குறித்து ஒரு கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். பேரவை விதி 54 (6)-ன் கீழ் அவர் பெயர் சேர்க்கப்படவில்லை.

2. தகவல் கோரல்—(தொடர்ச்சி).

(இ) உரிமைப் பிரச்சினை அறிவிப்பு.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : Sir I want to make submission under Rule 246 of the Assembly Rules.

நான் மாண்புமிகு திரு. ராஜா முகமது அவர்கள் மீது உரி மைப் பிரச்சினை கொடுத்திருக்கிறேன். வருகிற வழியில் கொஞ் சம் இடைஞ்சல் ஏற்பட்டு விட்ட காரணத்தால் காலதாமதமாகக் கொடுத்தேன் தாங்கள் இன்றையதினம் அனுமதிக்கவில்லை என்றாலும் நாளையதினம் அல்லது நாளை மறுதினம் அனுமதிப்பீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் கிருஷ்ண மூர்த்தி அவர்கள் உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை அவை கூடிய பிறகு அலுவலகத்தில் கொடுத்துவிட்டு அந்தப் பிரச்சினையை